
# வைத்திய சந்திரிகா




# वैद्यचन्द्रिका

தமிழ்நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் மாதப் பத்திரிகை

Vol. 9 | March, 1947 | No. 3

ஆசிரியர் :

V. B. நடராஜ சாஸ்த்ரி, ஆயுர்வேதாசார்ய.
வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.

ப்ரகாசகர் : பண்டித ஸ்ரீ. மெ. ஸுந்தரராஜாசார்யர்.

வருஷச்சந்தா ரூ. 3—0—0

எல்லா

சாஸ்த்ரீய ஆயுர்வேத மருந்துகளும்

வைத்யர்களுக்கும் - -

- - பொது ஜனங்களுக்கும்

குறைந்த விலையில் கிடைக்குமிடம்

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் லிட்.

சின்னக் கடைத் தெரு, தெப்பக்குளம். P. O. திருச்சி.

ஸ்ரீ :

ஸ்ரீ தந்வந்தரயே நம :

# 14-வது தமிழ்நாடு ஆயுர்வேத ஸம்மேளனமும் பொருட்காட்சியும்

## சிதம்பரம்.

---

அன்புடையீர் !

ஸ்ரீ விய வருடம் மாசி மாதம் 25 & 26 தேதிகளில்

(1947 மார்ச்சு-மீ 9 & 10)

மேற்படி ஸம்மேளனம் ராஜா அண்ணாமலை டவுன்ஹாலில்

ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேத ஆசார்ய வைத்யரத்ன,

பண்டிட் M. துரைஸ்வாமி அய்யங்கார் A. K. A. C.

அவர்கள் தலைமையில் நடைபெறும்.

ஸ்ரீ S. A. தேவநாயகய்யா M. L. A அவர்கள்

தென்னாற்காடு ஜில்லா போர்டு உபதலைவர், கடலூர்,

ஸம்மேளனத்தை ஆரம்பித்துவைக்க இசைந்துள்ளார்.

டாக்டர் A. சிதம்பரநாதஞ் செட்டியார் M. A. Ph. D.

தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

அவர்கள் பொருட்காட்சியைத் திறந்துவைப்பார்கள்.

தங்களுடைய வரவு ஆதரவுடன் கோரப்படுகிறது.


வைத்ய விசாரத, பிஷக் ரத்ன,
Dr. P. S. ஸ்ரீநிவாஸ அய்யர் A. V. A. C.,
ஆயுர்வேத ஸாஹித்ய சிரோமணி,
காரியதரிசி.

N. ஸ்ரீநிவாஸ ரெட்டியார்,
(முனிசிபல் சேர்மன்)
சேர்மன், வரவேற்புக் கமிட்டி,
சிதம்பரம்.

# நிகழ்ச்சி நிரல்

## 9—3—47 ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| காலை 7-மணி | ஸ்ரீ தந்வந்தரி பூஜை. |
| 10-30 மணி | கடவுள் வாழ்த்து. (பதஞ்ஜலி வித்யாலய வித்யார்த்திகள்) |
| | தந்வந்தரி கொடியேற்று விழா |
| | வரவேற்பு ஸங்கத் தலைவர் உபன்யாஸம். |
| | திறப்பு விழா பிரஸங்கம். (ஸ்ரீ S. A தேவ நாயகய்யா M. L. A.) |
| | ஸம்மேளனத் தலைவர் சொற்பொழிவு. |
| | விஷய நிர்தாரக ஸபை அமைப்பு - கண்காக்ஷிக் கமிட்டி அமைப்பு. |
| மாலை 3-மணி | ஆர்த்தவரோக விசாரம் - சர்ச்சை. |
| இரவு 8-மணி | பரிஷத் - வாக்கியார்த்தங்கள். |
| 9-30 மணி | விஷய நிர்தாரக சபைக் கூட்டம். |

## 10—3—47 திங்கட்கிழமை

| | |
|---|---|
| காலை 7-30 மணி | குழந்தைகளின் கட்டிகள், குலைக்கட்டிகளைப் பற்றிய விசாரம் - சர்ச்சை. |
| பகல் 1-30 மணி | பொருட்காட்சி திறப்பு. (டாக்டர் A. சிதம்பரநாதஞ் செட்டியார் M. A. Ph. D.) |
| | தீர்மானங்கள். |
| | பரிசளித்தல். |
| | காரியதரிசி அறிக்கை. |
| | மண்டல அங்கத்தினர்கள் நியமனம், |
| | தலைவரின் முடிவுரை. |
| | வந்தனோபசாரம். |
| | மங்களம். |

---

குறிப்பு:—1. பிரதிநிதிகளுக்குச் சாப்பாடும், இருப்பு வசதியும் அளிக்கப்படும். பிரதிநிதிக் கட்டணம் ரூ. 5

2. கண்காக்ஷிக் கட்டணம் ரூ. 10.

3. பிரதிநிதிகள் கட்டணத்தை முன்னதாகவே அனுப்பி சிதம்பரத்திற்கு வந்துசேருங்காலத்தையும் தெரிவிக்கக் கோரப்படுகிறது.



ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்ய சந்த்ரிகை.


| தொகுதி 9 | மார்ச்சு, 1947 | பகுதி 3 |
|---|---|---|


## செய்திக் குறிப்புகள்

### திருச்சி ஆயுர்வேத ஸபா, திருச்சி.

சென்ற 8-2-47- சனிக் கிழமை யன்று ஸபையின் விசேஷக் கூட்டம் ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் V. ஸுப்ரமண்ய அய்யர் (Member, Constituent Assembly) அவர்கள் தலைமையில் நடை பெற்றது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் அங்கத்தினர்களால் ஏக மனதாக அங்கீகரிக்கப் பட்டு நிறைவேற்றப் பட்டன.

1. திருச்சி ஆயுர்வேத ஸபை, தற்சமயம் இந்திய சர்க்காரால் இந்திய வைத்தியத்தின் நன்மைகளை அதிக பயன் படுத்திக் கொள்வதைப் பற்றிய உண்மைகளைக் கண்டறியும் பொருட்டு நியமிக்கப் பட்டிருக்கும் விசாரணை ஸமிதியில் விசேஷமாக ஆயுர் வேதப் பிரிவில் ஆயுர்வேதத்தில் பூர்ண ஞானமுள்ள வைத்யர்களை நியமிக்காததைக் கண்டு மிகவும் ஏமாற்றத்தைத் தெரிவிக்கின்றது. கீழ்க்கண்ட மூன்று ஆயுர்வேத வித்வான்கள் அந்த மத்ய விசாரணைக் கமிட்டிக்கு இன்றியமையாத உதவியைக் கொடுப்பார்களாதலால் அவர்களையும் அக் கமிட்டியில் சேர்த்துக் கொள்ள திருச்சி ஆயுர்வேத ஸபை சிபார்சு செய்கின்றது.

1. கவிராஜ் ஜ்யோதிஷ சந்த்ர ஸரஸ்வதி, பிஷகாசார்ய, ஸாங்க்யாசார்ய, மதனமோஹனலால் ஆயுர்வேத ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட். காச்மீர் கேட், டில்லி.

2. பண்டித— சிவசர்மா, ஆயுர்வேதாசார்ய, ரயில்வே ரோடு, லாஹோர்.

3. கவிராஜ மணீந்த்ர குமாரமுகர்ஜீ B. A. ஆயுர்வேத சாஸ்திரீ. 32, 33, 34-வது அகில இந்திய ஆயுர்வேத மஹா ஸம்மேளனத் தலைவர், 39. க்ரே ஸ்டிரீட், ஹட்கோலா- கல்கத்தா

II. திருச்சி ஆயுர்வேதஸபை இந்திய சர்க்காரை ஆயுர்வேதத்தைப் பற்றி விசாரிக்க ஏற்படுத்தி யிருக்கும் கமிட்டியை விரிவாக்கவும் பிரார்த்திக்கின்றது.

[இந்திய சர்க்காரால் இந்திய வைத்யத்தின் நன்மைகளை அதிகமாக பயன் படுத்திக்கொள்ள ஓர் ஆலோசனைக்கமிட்டியை நியமித்திருப்பது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதில் கீழ்க் கண்டவர்கள் ஆயுர்வேதப்பிரிவிற்கு அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

1 ஸர். R. N. சோப்ரா I. M. S. (Retired) தலைவர்.

2 வைத்ய- பிஷக்ரத்ன Dr. A. லக்ஷ்மீபதி, சென்னை சர்க்காரின் இந்திய வைத்திய ஆலோசனை போர்ட் மெம்பர்.

3 டாக்டர் பாலகிருஷ்ண சிந்தாமண் லகு, ஆயுர்வேத விசாரத் M.L.A. பம்பாய் இந்திய வைத்திய போர்டுத் தலைவர்.

4 டாக்டர் B.A. பாடக், பிரின்ஸிபால், ஹிந்து யுனிவர்ஸிடி ஆயுர்வேதிக் காலேஜ் மெம்பர், U.P. இந்திய வைத்திய போர்டு]

## சென்னை இந்திய வைத்ய ஸ்கூல் மாணவர் வேலை நிறுத்தம்.

சென்னை இந்திய வைத்ய ஸ்கூல் மாணவர்கள் சென்னை சர்க்கார் தங்களது முன்னேற்றத்திலுள்ள தடங்கல்களை நீக்க முன்வராததைக் கண்டிப்பதற்காக வேலை நிறுத்தம் செய்தனர்.

அம்மாணவர்களின் கோரிக்கைகள் பின் வருமாறு:—

1 இந்திய வைத்ய ஆஸ்பத்திரியில் பூர்ண ஸாதனங்கள் ஏற்படுத்தும் வரை மற்ற ஆஸ்பத்திரிகளில் (ஜெனரல் ஆஸ்பத்திரி, கண் ஆஸ்பத்திரி முதலியவை) கர்மபரிசயம் (Clinical Training) செய்துகொள்ள வசதிகள் செய்து தரவேண்டும்.

2 இந்த ஸ்கூலின் அந்தஸ்தை மற்ற மெடிகல் டிப்ளோமாக்களோடு ஸம அந்தஸ்தில் வைத்து ரிஜிஸ்ட்ரேஷன், உத்யோகம் சம்பளம், மற்ற சௌகர்யங்கள்- இவைகள் மற்ற மெடிகல் டிப்ளோமா பெற்றவர்களுக்குப்போல் ஸமமாக இருக்க வேண்டும்.

3 இந்த ஸ்கூலே காலேஜ் அந்தஸ்துக்கு உயர்த்தவேண்டும்.

4 ஹாஸ்டலில் அதிக வஸதி அளிக்க வேண்டும்.

5 இந்திய வைத்தியர்களுடைய ரிஜிஸ்டரில் A. B, பிரிவை ஒன்ருக்குவதாக வந்துள்ள சர்க்கார் அறிக்கையை ரத்து செய்து முன் போல் பிரிவினையை ஏற்படுத்த வேண்டும். இவை போன்றவை.

ஸமீபத்தில் அம் மாணவர்கள் தங்களது கோரிக்கைகள் அனேகமாக சர்க்காரால் ஒப்புக்கொள்ளப்பட்டு அதைப் பற்றிய ஏற்பாடுகள் நடை பெற்று வருவதால் தங்களது வேலை நிறுத்தத்தை நிறுத்தி விட்டனர்.

# பாண்டு ரோகம்.

*[வைத்ய விசாரத— எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ]*

(22-வது பக்கத் தொடர்ச்சி)

இரவில் கண் விழிப்பு, வழி நடப்பு, அதிக தேகப் பயிற்சி, வேகமாகப் போகும் யானங்களில் பிரயாணம், காலத்தில் ஆகார மின்மை, அதிக வியவாயம், சிந்தா, த்யானம், சோகம் முதலியதால் கலங்குதல், சித்தத்தின் உத்வேகம், சோர்வு முதலியவை அடிக்கடி தொடர்பாக அதற்கு வேண்டிய பிரதீகாரங்கள் அவ்வப்பொழுது செய்யாமலிருந்தால் வாதிக பாண்டுவிற்கும் காரணமாகின்றன.

வெய்யிலில் நடத்தல், அக்னிதாபத்திலிடையே அடிக்கடி இருத்தல், பசி, தாகம் மிஞ்சிப் போன பிறகு அவைகளை திருப்தி செய்தல்-இவைகள் பைத்திக பாண்டு விற்கும், சிறிதளவு தேகப்பயிற்சி இன்மை, பகலில் தூக்கம், சாப்பிட்ட உடனே தூக்கம், ஈரமான தரையில் படுத்தல், ஆநூப தேசத்தில் அதிக வாசம்– கபஜ பாண்டுவையும் அதிகப்படுத்துகின்றன.

இந்த மித்யாஹார விஹாரங்கள் பரிபாகக்ரியையில் இடையூறு அளித்தும் பிரகிருத பித்தாபிவிருத்தி ஏற்படா

மலும் விதக்தமான பித்தம் உண்டாகியும் கபத்தை மல மாக்கியும் தேகத்தைக் கெடுக்கின்றன.

பூர்வரூபம்.

ரோகியாகப் போகின்றவன் சரீரத்தில் கிரமமாக பலம் எடை குறைவதைத் தானே அறிகின்ருன். அண் டிப் பழகுகிறவர்களிடமிருந்தும் தனது சரீரத்தில் ஏற்பட் டுள்ள நிற மாறுபாடு, இளைப்பு முதலியதை அறிந்து கொள்ளுகின்ருன். தன் தோல் நிறம் வெளுத்தும் மெழுகு போன்ற ஓர் வறண்ட உணர்ச்சியுடனும் வெடித்தும் காணப்படுகின்றது. வியர்வை குறைகின்றது. ஹ்ருதயம் துடிப்பது மார்பில் கை வைத்தாலே புலப்படுகின்றது. சரீரத்தில் சோர்வு, கண் இமைகளின் வீக்கம், சிறிது சாப் பிட்டாலும் ஜீர்ணமாகாதிருத்தல், உண்ண விருப்பமின் மை, உண்டாலும் களைப்பு, அசதி, சரீரமிளைத்தும் சரீரம் கனமாக இருப்பது போன்ற உணர்ச்சி, ஊக்கமளிக்கும் ஓஜஸ் குன்றுவதால் தூக்கமும் சோம்பலும், மூத்ரம் மஞ்ச ளாகுதல்—இவை பூர்வ ரூபத்தில் தோன்றும்.

ரூபம்:— பூர்வ ரூபத்தில் கூறப்பட்டுள்ளவையே நன்கு விளங்கும். ரக்தம் குறையும். ரஸம் குறைவதால் மேதஸ் சோஷம், ஸாரமின்மை, இந்திரியங்கள் வெல வெலத்துப் போகுதல், அங்கங்களில் பிசையப்பட்டது போல் வலி, சீக் ரம் கோபித்தல், இரைந்துபேச சக்தியின்மை, அன்னத்வே ஷம், சில இடங்களில் குளிர்ந்தும் சில இடங்களில் உஷ்ண மாகவுமிருத்தல், மனது சோர்வடைதல், இந்திரியங்கள் அதன் அதன் கார்யங்களில் ஒழுங்காக பிரவர்த்திக்காமல் சோர்ந்திருப்பது, தலை சுற்றல், மயக்கம், கண் முன்பு வலை போன்ற வஸ்துவைக் காணுதல், அடிக்கடி கபம் காரி உமிழ்தல், மயிர் உதிருதல், அஜீர்ணம், உதடு, பல்லீறு கள் கண்ணிமை இவைகள் வெளுத்து ரக்தமின்மையைக் காட்டுதல், அடிக்கடி வாயிலிருந்தும் பல்லீறுகளிலிருந்தும் ரக்தம் கசிதல், வாயில் புண், நாக்கு சிவந்தும் சிலநேரம் வெளுத்துமிருத்தல், சிலருக்கு ஜ்வரம்-(விஷமமாகவும் மிரு துவாகவுமிருக்கும்) வயிற்றில் வலி, வாந்தி, சிலருக்கு அதி

ஸாரமும், சிலருக்கு மல பந்தமும், ப்லீஹா (சிலருக்கு) பெருத்து இருத்தல், தலை வலி, ஹ்ருதயத்தில் வலி, படபடப்பு, ஹ்ருதயம் விரிவது போன்ற வலி, சுவாஸம், கால்களில் வீக்கம், எல்லா அங்கங்களிலும் வலி, ஸ்திரீகளுக்கு ரஜஸே உண்டாகாமலோ அல்லது தடைபட்டோ ரஜஸ் காணாதிருத்தல், படுக்கையிலிருந்தெழுந்தாலும் தலை சுற்றுதல், மயக்கம் முதலியவை ஏற்படுதல் இவைகள் காணப்படுகின்றன.

வாதஜ பாண்டுவில் விசேஷமாக வாதிகமான கீழ்க் கண்ட ரூபங்கள் காணப்படுகின்றன. ஸிரா, நகம், மலம் மூத்ரம், கண்கள் இவைகளில் கருப்பு சிகப்பு வர்ணம் கலந்திருத்தல், வரட்சி, இளைப்பு, தோல் வெடித்தல் ஹ்ருதயம் ஆடுவது போல் உணர்ச்சி, சரீர காந்தி மங்குதல், அதிக தாகம், வாந்தி, வயிறு உப்புதல், நாக்கில் ருசி யின்மை, மலம் வரண்டு தீய்ந்து வெளியாகுதல், தலையிலும் பார்சுவத்திலும் வலி, சித்தத்தில் சாஞ்சல்யம் இவைகள்.

பித்த பாண்டுவில்— கண், மூத்ரம், மலம், முதலியவைகள் மஞ்சளாகவும் பச்சையாகவும் இருத்தல், பித்தஜ சுவாஸ காஸங்கள், சரீரத்தில் இளைப்பு, மயக்கம், ஹ்ருல்லாஸம், ஹ்ருதயத்தில் பிரமானுபவம், அங்கங்களின் சோர்வு, எரிச்சல், தாகம், முகத்தில் வீக்கம்' விஷம ஜ்வரம், வியர்வை அதிகமாகுதல், சீத ஸ்பர்சம் விரும்புதல், பசியின்மை, வாயில் கசப்பு, உஷ்ணம் ஒத்துக்கொள்ளாதிருத்தல், புளிப்பு வேண்டாமை, புளித்த ஏப்பம், அன்னத்திற்கு விதக்த பாகம், வாய் நாற்றம், மலம் இளகியிருத்தல். கபஜத்தில் கண் முதலியவை வெளுத்துக் காணுதல், சோம்பல், அயர்வு, அருசி, இளைப்பு, வாயில் நீரூற்றம், வாந்தி, கால்களில் வீக்கம், சரீர கௌரவம், மயிர்க் கூச்சலிடுதல், மூர்ச்சை, சிறிது கார்யம் செய்தாலும் சிரமம், சுவாஸம், காஸம், தொண்டை கம்முதல், வரட்சியும் உஷ்ணமும் சரீரத்திற்கு ஹிதமாக இருத்தல், வாய் தித்தித்தும், உப்புக்கரித்துமிருத்

தல், தலை கனத்திருத்தல், தூக்கம், மூத்ரம் அதிகமாகப் பெருகுதல் இவைகள் காணப்படும்.

ஸந்நிபாதஜத்தில் எல்லாவற்றின் லக்ஷணமும் ஸங்கீர்ணமாக இருக்கும்.

**மிருத்திகா பாண்டுவில்:—** நாபி, மேஹனம், கால் முகம், இவைகளில் வீக்கம், மலத்தில் கிருமி அதிகமாகத் தென்படுதல், மலம் இளகி ரத்தம் கபத்துடன் வெளியாகுதல்— இவை விசேஷமாக இருக்கும்.

பாண்டுவில் கீழ்க்கண்ட அங்கங்கள் விகிருதி அடைகின்றன. யகிருத், ப்லீஹா, பித்தாசயம், பித்தநளிகை ஹ்ருதயம் முதலியவைகள்.

**சிகிச்சை:—** சிகித்ஸைக்கு ஆரம்பிக்குமுன் வியாதியில் எந்த தோஷம் பிரபலம், துர்பலம் என்பதை நன்கு ஆராய்ந்தறிய வேண்டும். சரீரத்தின் ப்ரகிருதி, வியாதியின் காரணம், அவனது ஆஹார விஹாரங்கள் இவைகளிலும் விசேஷ கவனம் செலுத்தவேண்டும். சிற்சில இடங்களில் வியாதியின் காரணத்திற்குகந்த சிகித்ஸை செய்யவேண்டிவரும். ஆகந்துகமாக ரக்தக்ஷயம் ஏற்பட்டு பாண்டுஏற்பட்டால் அங்கு **स्वयोनियर्धन**மான ரக்த வர்த்தகமான ஆஹார விஹாரங்கள்- மாம்ஸம், அதிலும் யகிருத் மாம்ஸம் முதலியவை விசேஷித்த உபகாரம் செய்ய வல்லவை.

**சிகிச்சைக் கிரமம்.**

ஔஷதம் உபயோகிக்குமுன் கோஷ்ட சுத்திக்காகவும் செய்யப்போகும் சிகித்ஸையின் ஸம்பூர்ண பல ஸித்திக்காகவும் ஸ்னேஹகர்மம் முதலில் செய்யவேண்டும். இவ்வியாதியில், ரஸம், ரக்தம், இவைகள் பிரதானமாகக் குன்றியோ, கேடடைந்தோ வியாதி உத்பத்தியாவதாலும், பித்த சிகித்ஸைக்கு அந்த ஸ்னேஹம் தான் இவ்விடம் உசிதம் எனவும் தீபனமாயும் ஓஜஸ்ஸை வளர்க்கச்செய்தும், ரக்தத்தை தெளிவு படுத்துவதும், ஸத்தை வளர்ப்பதும் பித்த சமனமாயுமுள்ள கிருதம் உபயோகப் படுத்தப் பட

கின்றது. நெய்யின் தீபன சக்தியால் ஓஜஸாகிற தாது ஸாரம் உண்டாவதும், விதக்தமான பித்தம் சமனமடைவதும் ஆக பித்த க்ஷயத்திலும், விதக்த பித்த விருத்தியிலும் தகுந்த ஔஷதமாகின்றது. பாண்டுவின் காரணங்களுக்கும் ஏற்படும் லக்ஷணங்களுக்கும் உபத்ரவங்களுக்கும் தகுந்தாற்போல் நெய்யில் ஸம்ஸ்காரம் ஏற்படுத்தப் படுகின்றது. அவ்வித ஸம்ஸ்காரம் அடைந்த கிருதயோகங்கள் கிரந்தங்களில் காணப்படுகின்றன. சரகத்தில் பாண்டு சிகித்ஸையில் கீழ்க் கண்ட கிருதயோகங்கள் காணப்படுகின்றன.

தாடிமாதி கிருதம்:— இது விசேஷமாக தீபன சக்தியை அதிகரித்தும் மூடவாதத்தை அனுலோமனம் செய்தும் ஹிருதயத்திற்கு பலம் உண்டுபண்ணியும் கபவாதங்களை ஸ்வஸ்தானத்திற்குக் கொண்டுவந்தும் பாண்டுவை தீர்க்கின்றது. மூடவாதத்தினுல் ஏற்படும் ரஸாதிபரிணமைத்தின் பங்கத்தைத் தடுக்கின்றது. அதனுல் அர்சஸ், குல்மம் மூடவாதம், சுவாஸம், காஸம், ஹ்ருத்ரோகம்— இவைகளால் உண்டாகும் பாண்டு ரோகத்தைத் தீர்க்கவல்லது.

கடுகாதி கிருதம்:— இது அனேகமாக ரக்தஸ்தம்பனமாயும் ரக்த பிரஸாதனமாயும் பித்தத்தை சமனப்படுத்துவதும் ஹிருதயத்திற்கு ஹிதமாயும் ஜ்வரத்தைத் தீர்க்க வல்லதாயுமுள்ள திரவ்யங்களால் ஸம்ஸ்காரம் ஏற்படுத்தப் பட்டிருப்பதால் எரிச்சல், கொப்புளம் இவைகளுடன் கூடியதும் ரக்த பித்தம் ரக்தார்சஸ், ரக்தப் பிரதரம், பகந்தரம் இவைகளில் உபத்ரவமாயுள்ள பாண்டுவிலும் பாண்டுவில் ஏற்படும் நீடித்த ஜ்வரத்திலும் தகுந்த ஔஷத்மாகின்றது. இவ்விதம் பத்யாதிகிருதம் குல்மத்திலும், குல்மத்தில் ஏற்படும் பாண்டுவிலும், தந்தீ கிருதம் ப்லீஹாவில் வலி வீக்கம் இவைகளுடன் கூடிய பாண்டுவிலும், கல்யாணகிருதம் சித்தப்ரமம் முதலிய மானஸ தோஷமுள்ள பாண்டுவிலும் தாடிக கிருதம் கிரஹணி அதிஸாரம் இவைகளின் உபத்ரவத்திலும், அதிகமாக உபயோகப்படுகின்றன. இவ்விதம் அந்த அந்த உபத்ரவ லக்ஷண காரணுதிகளை அநுஸரித்து

கிருதத்தை ஸம்ஸ்காரம் செய்து உபயோகப் படுத்த வேண்டும்.

பாஹ்யமான ஸ்னேஹப் பிரயோகம் அவ்வளவு அதிகம் உபயோகத்திலில்லை.

தோல் முதலியவைகளில் வரட்சி அதிகம் காணப்படுவதால் வாதிகபாண்டுவில் தைலத்தால் சிறிது ஸ்னேஹனம் செய்வது உத்தமம். கபஜ பாண்டுவில் கபத்தை அதிகரிக்கச் செய்வதாலும், பித்தஜ பாண்டுவில் ஜ்வரத்தை அதிகரிக்கச் செய்வதாலும் பாஹ்யமான தைலப்ரயோகம் யுக்தமில்லை.

இவ்விதம் ஸ்னேஹனம் செய்துவிட்டு வமனம் விரேசனம் செய்து வைக்க வேண்டும். ஆனல் ஆர்ஷ கிரந்தங்களில் கூறியபடி தற்காலத்தில் ரோகிகளுக்கு வமனம் செய்து வைப்பது வழக்கத்திலில்லை. ரோகிகளின் சரீரபலம் மிகவும் குறைவாக இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். இரண்டாவது பித்தவியாதியில் வமனம் அவ்வளவு யுக்தமுமல்ல. அவசியமான விடத்தில் வமனமும் விரேசனமும் வியாதியின் அவஸ்தையை அனுஸரித்துக் கொடுக்கலாம். ஆனல் குறைந்திருக்கும் சரீரபலத்தை மிகவும் குன்றவைக்கக்கூடாது. வியாதி பிரசமத்திற்கு உபகாரகமாக இருக்குமெனத்தோன்றினல் வமனமும் கொடுக்கலாம். விரேசனௌஷதங்களில் தந்தி விதை சேர்க்கக்கூடாது. தந்தீ மூலம் சேர்க்கப்படலாம். வியாதிஸ்தனுக்கு அதிஸாரமிருந்தால் விரேசனம் செய்து வைக்க வேண்டியதில்லை.

இவ்விதம் கோஷ்டம் சுத்தமாகி மூட வாதமும் அனுலோமனம் செய்யப் பட்டவுடன் ரக்த வர்த்தகமான நவாயஸம் முதலிய லோஹப்ரயோகங்கள் செய்வது நலம். அயஸ் பிரயோகங்களிலும் குதிரை– பசு இவைகளின் மூத்திரத்தில் பல தடவை பாவனை செய்யப் பட்டுப் பஸ்மமாக்கப் பட்டவை மிகவும் உயர்ந்தவை. இதற்காக குதிரைகளின் மூத்ரத்தால் அனேக தடவை பாவனை செய்யப் பட்ட குதிரையின் லாடங்களை புடம் போட்டு உபயோகப்

படுத்துவதுண்டு. சிலர் குதிரை லாயம் மாட்டுக்கொட்டில் இவைகளில் பூமியில் மண்டூரம் லோஹம் இவைகளைப் புதைத்து அவ்விடத்தில் எப்பொழுதும் மூத்ரம் தேங்கும் படி செய்து ஒன்றிரண்டு வருஷங்கள் கழித்து அந்த அயஸ்ஸை எடுத்து புடம் போட்டு உபயோகப்படுத்தி நல்ல பலன் காண்கின்றனர். இவ்விதம் செய்யப்படும் அய பஸ்மங்களில் அயஸ்ஸின் ஸ்வபாவமான கோஷ்ட விபந்தம் முதலியவை ஏற்படுவதில்லை. இவ்விதம் அயஸ் மண்டூரம், தாம்ரம், சிலாஜது இவைகளை முக்கியமாகக் கொண்ட பாண்டுவில் உபகாரகமான யோகங்கள் பல உள்ளன. அவைகளில் பாண்டு பஞ்சானந ரசம், நவாயஸம், நவ மண்டூரம், புனர்னவ மண்டூரம், பஞ்சாம்ருத லோஹம், அயஸ் சிலாஜது லஹித சந்திர பிரபா குக்குலு, மண்டூர வஜ்ர வடகம், புடபக்வ விஷம ஜ்வர லோஹம், லோஹ பர்படீ, பஞ்சாம்ருத பர்படீ, விஜய பர்படீ, லோகநாத ரசம், முதலியவைகள் மிகவும் உயர்ந்ததாக உபயோகத்தில் காணப்படுகின்றன.

**பாண்டுவில் உபத்ரவங்கள்—: 1. காமலா—**

பாண்டுவில் பித்தம் கடினமாக இருக்கும் பொழுது ஸ்வபாவமாக பித்தவர்த்தகமான அம்ல லவண ரஸங்களில் ஆசை ஏற்படுவதுண்டு. ரத்தத்திலுள்ள பித்தாம்சம் விதக்தமாகி விருத்தி அடைந்து சாகையிலிருந்து கோஷ்ட மார்க்கத்தை அடைந்து விடுகின்றது. அநேகமாக பித்தஜ பாண்டுவின் லக்ஷணம் தோன்றுகின்றது. இவ்விதம் சாகையிலிருந்து கோஷ்டத்திற்கு வரும் பித்தத்தை கபம் தடுத்து த்வக், கண் முதலிய இடங்களில் மாத்திரம் மஞ்சள் பச்சை வர்ணம் பரவுகின்றது. மலம், மூத்ரம் இரண்டும் வெளுத்து வெளிவரும். அல்லது இதற்கு எதிரிடையாக த்வக் முதலிய இடங்களில் பித்த ஸஞ்சாரமில்லாமல் கோஷ்ட மார்க்கத்தில் மாத்திரம் சஞ்சரிக்க விபரீதமான லக்ஷணங்கள் தோன்றுகின்றன. இவ்விடத்தில் காமலையில் மஞ்சள் நிறம் அதிகம் தென்படும். பாண்டுவில் மஞ்சள் கலந்த வெளிர் நிறம் அதிகமாக இருக்கும் என்பதே விசே

ஷம். பாண்டுவில் இல்லாத கோஷ்ட- தூஷணமும் இதில் அதிகம். பார்வையிலும் பித்த சக்தியால் பார்ப்பன வெல்லாம் மஞ்சளாகத்தோன்றும். மூத்ரம் சிவந்து காட்டும், பார்வை குன்றும். காமலையின் முற்றின அவஸ்தை கும்ப காமலா. இவ்விடத்தில் கோஷ்டத்தில் பித்த ஸஞ்சயம் அதிகம் ஏற்பட்டு **खरीभावं** ஏற்படுகின்றது. அப்பொழுது வியாதி அசாத்திய தசையை அடைகின்றது.

2. ஹலீமகம்:- இதுவும் பாண்டு ரோகத்தின் ஓர் கெட்ட அவஸ்தை. பாண்டு நிறம் கெட்டு- அதாவது வியாதி முற்றி, வாத பித்த துஷ்டி அதிகம்; ஏற்பட்டு, பச்சை, கருப்பு, மஞ்சள் நிறம் ஏற்பட்டு, மயக்கம், தாகம், ம்ருதூஷ்ண ஜ்வரம், சோர்வு, பலக்குறைவு, தீபன சக்தியின்மை இவைகள் அதிகமாகும்.

3. சோபம்:- அனேகமாக வாதஜத்தில் குஹ்யத்திலும், பித்தத்தில் முகத்திலும், கபஜத்தில் பாதத்திலும், ம்ருத்திகா பாண்டுவிலும், ஸாந்நிபாதிக பாண்டுவிலும், எல்லாவிடங்களிலும் வீக்கம் ஏற்படுகின்றது. இது சோபத்திற்குள்ள பாஹ்யமான சிகிச்சைகளால் மட்டும் சௌகர்யமாவதில்லை.

இதைத்தவிர தாஹம், விஸ்போடம், ஜ்வரம், ஹ்ருத்ரோகம். முதலிய பல உபத்ரவங்கள் உள்ளன.

இவைகள் பிரதான வியாதி குறைந்தவுடன் தானகவே குறைகின்றன. காமலையில் சில அஞ்சனங்கள் ஆங்காங்கு கூறப் பட்டுள்ளன. விசேஷமாக தும்பைப்பூவின் சாறை 3 சொட்டு கண்ணில் விட்டு சிறிது நேரம் கழித்து எரிச்சல் ஏற்பட்டுக் கண்ணீர் வடிந்தவுடன் குளிர்ந்த ஜலம் விட்டுக் கண்களை அலம்ப வேண்டும். காமலையில் பித்த பாண்டுவின் சிகித்ஸையே யுக்தம்.

**பத்தியம்.** பழைய சம்பா அரிசி, கோதுமை சத்து, ரொட்டி, பயறு, துவரை, கொத்துக் கடலை, புடலங்காய், மூக்கரட்டைக் கீரை, பொன்னுங்கண்ணிக் கீரை, இளநீர்,

இவைகள் ஹிதம். விச்ராந்தி எடுத்துக் கொள்வது, படுக்கையிலிருப்பது, அலவணமான ஆஹாரங்களை சேவிப்பது மாதுளை, ஆரஞ்சு, தித்திப்பு நார்த்தை, திராக்ஷை, பேரீச்சை முதலிய பழங்கள் உத்தமமானவை, பசும் பாலை சம ஜலம் சேர்த்து ஜலம் பாதி மீதியிருக்கும்வரை காய்ச்சி உபயோகப்படுத்தலாம். வெண்ணை எடுத்த மோர், பசும் நெய், இவைகள் உபயோகிக்கலாம்.

**சிற்சில லோஹ கல்பங்கள்.**

கண்டகாத்ய லௌஹம்- இது லோஹபஸ்மம் சேர்ந்த ஓர் அவலேஹம். இதில் கலக்கப்படும் லோஹபஸ்மம், மனச்சிலையினாலோ, ஸ்வர்ண மாக்ஷிகத்தாலோ, அல்லது இரண்டினாலுமோ பஸ்மமாக்கவேண்டும். மனோசிலை சேர்ந்த லோஹப்ரயோகம் சரீரத்தில் ஸ்வாபாவிகமாக ஏற்படும் ஸ்வதந்த்ர பாண்டுவில் தோஷதூஷ்ய ஸம்மூர்ச்சனையை எளிதில் சரிப்படுத்தி ரஸரக்தாதிகளை ஸ்வஸ்த தசையில் கொண்டு வைப்பதில் நிகரற்றது. இது நவீன முறைகளிலும் Iron et arsonic இஞ்செக்ஷன் முறைகளில் நன்கு உபயோகமுள்ளதாகக் கருதப் படுகின்றது. இவ் விதமே தாம்ரம் கலந்த லோஹத்தின் உபயோகமும் சாலச் சிறந்ததெனக் கருதுகிறார்கள். தாம்ரத்தின் கனி விசேஷங்களில் ஒன்றான ஸ்வர்ண மாக்ஷிகத்தாலும் லோஹம் பஸ்மமாக்கப் பெற்று இந்தக் கண்டகாத்ய லௌஹத்தில் சேர்க்கப் படுவது வியாதி ஸம்மூர்ச்சனையை அறவே அகற்றுவதில் இணையற்றதாக்கும். இந்த லௌஹத்துக்கு அநுபான ரூபமாயும், அதன் சக்தியை அபிவிருத்தி செய்யவல்லவைகளாயும், விசேஷமாக ரக்த துஷ்டியை— அதிலும் விதாஹமடைந்த பித்தத்தால் ஏற்படும் ரக்த துஷ்டியை அகற்ற உபகாரம் செய்பவைகளாகவே சேர்க்கப்பட்டிருக்கின்றது. ரக்தப் பிரஸாதனமாயும், ரக்த வர்த்தகமாயும், புஷ்டி, அக்னிதீப்தி இவைகளை அளித்தும், ரக்தபித்தம், அம்லபித்தம், அஸ்ருக்தரம், கர்ப்பஸ்ராவம் முதலியதில் ஏற்படும் ரக்தாதிஸ்ருதி, ரக்தார்சஸ் போன்ற ரக்ததூஷகமான வியாதிகளில் ஏற்படும் உபத்ரவ பாண்டு ரோகங்க

ளிலும் நிகரற்ற ஔஷதமாக விளங்குகின்றது. 6—20 யவப் பிரமாணம் சாப்பிடலாம். அனுபானமாகக் காய்ச்சிய பசும்பால் கட்டாயம் சாப்பிடவேண்டும். (எல்லா லோஹ கல்பங்களுக்கும் பால் அனுபானமாகச் சாப்பிடும் பொழுது லோஹௌஷதங்களுக்கு 64 பங்கு பால் சாப்பிடவேண்டுமென்ற ஓர் நியமமிருக்கிறது. இது தனிபஸ்மமாக உபயோகிக்காமல் நவாயசம், கண்டகாத்யலௌஹம், தாத்ரீ லௌஹம் முதலிய லோஹ கல்பங்கள் உபயோகப் படும் பொழுதே ஆதரிக்கப் படுகின்றது.) அஸ்ருக்தரம் முதலிய யோங்யாசய வ்யாதிகளில் அசோகப் பட்டை கஷாயம், உதும்பரஸாரம் போன்ற வியாதிக்கேற்ற அனுபானங்களும் ஏற்றவை.

**மதுகாத்யவலேஹம்.** (பை-ரத்னவளி–ஸ்த்ரீரோகம்.) இதில் ரக்தஸ்தம்பனமான ஔஷதங்களுடன் லோஹம், ரஜதம், அப்ரகம் இவைகளின் பஸ்மங்களும் சேருகின்றன. ரக்த ப்ரஸாதனமான சதாவரீ ஸ்வரஸம் முக்யமான லோஹானுபானமாக இருக்கின்றது.

**சிஞ்சாத்யவலேஹம்.** இது மிகவும் சிறந்த அக்னிதீப்தி கரமாகவும், சோபம், காமலை போன்ற உபத்ரவங்களுடன் கூடிய பாண்டுவில் சிறந்தது. இதிலும் லோஹம் சேருகின்றது.

**லோஹாஸவம்.** லோஹத்தின் ஸ்வபாவமான கோஷ்ட விபந்தம் முதலிய துர்குணங்களை அடியோடகற்ற, த்ரிபலை த்ரிகடு, சித்ரகம் போன்ற திவ்யௌஷதங்களுடன் கூடிய ஓர் லோஹகல்பம். இதில் விமர்சகர்களுடைய விவாதத்துக்கு இடமாக லோஹத்தை எவ்விதம் சேர்ப்பதென்ற சர்ச்சை விரிவாக இருக்கின்றது. சுத்த லோஹ சூர்ணமாகவா? பஸ்மமாக்கப்பட்ட லோஹமாகவா? அயஸ்ஸின் உபதாதுவான காஸீஸமாகவா என்ற சர்ச்சைக்கு முடிவே காணப்படவில்லை. கேவல லோஹ சூர்ணத்தைக் காட்டிலும் லோஹ பஸ்மமாகவோ, சுத்த காஸீஸமாகவோ சேர்ப்பதில் சேர்க்கப்படும் லோஹம் திரவத்தில் நன்கு

கரைவதாகக் காணப்படுகிறது என்பது உண்மை. லோஹ பஸ்மமாகச் சேர்க்கப்படினும் கரையாத லோஹ பஸ்மம் ஆஸவ ஸித்திக்குப்பிறகும் மண்டத்தில் காணப்படுகின்றது. ஆகையால் திரவத்தில் கரையக்கூடிய அளவில் லோஹத்தைப் போடுவது என்பது மிகுந்த ஆராய்ச்சியில் நிர்ணயிக்கக்கூடிய விஷயம்.

குமார்யாஸவம்:- இதில் லோஹ பஸ்மமும் தாம்ர பஸ்மமும் சேர்க்கப்படுகின்றன. காஸம், ச்வாஸம், க்ஷயம், உதரம் முதலிய ரோகங்களில் உபத்ரவமாக வரும் பாண்டு ரோகத்தில் உயர்ந்த ஔஷத கல்பம்.

ஸாத்யா ஸாத்ய விவேகம்:- வெகு நாட்பட்டும் உடம்பு முழுவதும் வீங்கியும், கண்களில் மஞ்சள் படர்ந்து பார்ப்பவைகள் மஞ்சளாகத் தோன்றியும், மலபந்த மேற்பட்டோ, அல்லது மலமே குறைந்தோ, அல்லது கபம், ரக்தம், இவைகளுடன் மலமிளகி பிரவர்த்தியாகியும், உடம்பு தவளை போல் வெளுத்து ஊதியும், ரக்தம் அளவுக்கு மீறிக்குறைந்தும் காணப்பட்டால் அஸாத்யமேயாகும்.

---

| | | |
|---|---|---|
| பிரவாஹிகா | ஸம்ஸ்க்ருதம் | V. B. நடராஜசாஸ்திரீ |
| சீதபேதி—வயிற்றுக் கடுப்பு | தமிழ் | |
| DYSENTERY | இங்க்லீஷ் | |

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

### 1. बिल्वादि चूर्णम्— வில்வாதி சூர்ணம்.

| உலர்ந்த | தோலா | | தோலா |
|---|---|---|---|
| வில்வப்பிஞ்சுத் துண்டங்கள் | 1 | பங்கா— (கஞ்சாவின் பூ-இலை) | 1 |
| இலவம் பிசின் | 1 | கொத்தமல்லி விதை | 2 |
| சுக்கு | 1 | சோம்பு(பெருஞ்ஜீரகம்) | 4 |

கடைசியில் சொல்லிய 2 சாமான்களை லேசாய் வறுத்து எடுத்துக் கொள்ளவும். எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து இடித்து வஸ்திராயனம் செய்து சீசாவில் மூடி வைத்துக்கொள்ளவும்.

இளங்குழந்தைகள் முதல் எல்லோருக்கும் கொடுக்கலாம். அளவு 6 அரிசியிடை முதல் $\frac{1}{8}$ தோலா. அநுபானம் தேன். இத்துடன் பிஞ்சுக் கடுக்காய் சூர்ணம் முதலில் ஸம இடையும் பிறகு கிரமமாய் குறைவான இடையுமாக சேர்த்துக்கொடுப்பது மிக உபகாரம். ஆமபாசனம் நன்றாக நடக்கும்.

பிரவாஹிகாவில் அடிவயிற்றில் ஏற்படும் கத்தரிப்பு வலியை நிறுத்த வில்வப்பிஞ்சு சூர்ணமும் 'பாடா' என்னும் வட்டத்திருப்பி மூலத்தின் சூர்ணம் ஸமனிடையாகத் தேனில் சாப்பிட நிற்கும்.

## 2. अभयादिचूर्णम्— அபயாதி சூர்ணம்.

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | கடுக்காய்ப் பூ |
| யானைக்கொம்பனதி | ஓமம் |
| விடயம் | நாக கேஸரம் (அஸ[illegible] |
| கிராம்பு | கருவேப்பிலை— [illegible] |

எல்லாம் ஸமனிடை.

முதல் ஐந்து சரக்குகளையும் லேசாக வறுத்து எ[illegible]துக்கொள்ளவேண்டும். அஸல் நாககேஸரம் குங்கும[illegible] போல் இருக்கும். இது விலையதிகமுள்ள[illegible]. [illegible]லும் சிறந்தது. கிடைக்காவிடில் சிறுநாகப்பூ சே[illegible] எல்லாவற்றையும் சேர்த்து இடித்து வஸ்திரா[illegible] செய்து கொஞ்சம் புளித்த மோரில் சுமார் 15 நிமி[illegible] அக்னியில் கொதிக்க வைத்து துணியி[illegible] பிழிந்து மோரை அகற்றி, வெய்யிலில் உலர்த்திப் பொடி[illegible] சீசாவி[illegible] வைத்துக்கொள்ளவும்.

வயஸை அநுஸரித்து 6 அரிசியிடை முதல் $\frac{1}{8}$ தோல[illegible] வரை 1 நாளில் 3-4 தரம் தேனில் சாப்பிடவேண்டும்.

## 3. एरण्डनिर्यास योगः— ஏரண்ட நிர்யாஸ யோகம்.

கருவேலம் பிசின் சுத்தம் செய்தது. வெளுப்புப் பொடியாக மருந்துக் கடையில் விற்கப்படுகிறது. (ஆங்கிலத்தில் Gum acacia என்று பெயர்).

கருவேலம் பிசின் $\frac{3}{8}$ தோலா, விளக்கெண்ணை $\frac{1}{8}$ அவுன்ஸ், வெந்நீர் 1 அவுன்ஸ்— மூன்றையும் சேர்த்து

அரைத்தால் பால் போல் ஆகும். ½-முதல் 1-அவுன்ஸ் 1 வேளைக்கு 1 நாளில் 3, 4 தரம் சாப்பிடவும். இதற்கு Castor Oil Emulsion என்று ஆங்கில வைத்தியத்தில் சொல்லுவது வழக்கம். கருவேலம் பிசினும், விளக்கெண்ணெயும் பிரவாஹிகை ரோகங்களில் நல்லதென ஆயுர் வேதத்திலும் சொல்லியிருக்கிறது.

4. ரக்தம் போக்குக் குறையாமலிருக்கும் பிரவாஹிகையில் குடஜம் என்று சொல்லப்படும் கசப்பு வெட்பாலை மரத்தின் பட்டை சிலாக்கியம்.

| | |
|---|---|
| வெட்பாலை மரத்தின் பட்டை | கோரைக் கிழங்கு |
| | அதிவிடயம் |
| மாதுளத்தின் பிஞ்சுக்காய் | வெட்பாலையரிசி |
| வில்வப்பிஞ்சு | இலவம் பிசின் |

இவைகளில் கிடைத்தவைகளைச் சேர்த்து மொத்தம் 4 தோலா எடை எடுத்து நன்றாய் நசுக்கி அதில் 32 அவுன்ஸ் ஜலம் சேர்த்து 8 அவுன்ஸ் மிச்சமாகக் காய்ச்சி வடிகட்டி 1 அவுன்ஸ் வீதம் கஷாயம், தேன் ¼ அவுன்ஸ் சேர்த்து 4 மணிக்கொருதரம் உட்கொள்ள ரக்தப் போக்குக் குறையும். பிரவாஹிகை சிகித்ஸையில் முக்யமாய் கவனிக்க வேண்டியது. இது சமனமாகி திரும்ப ஏற்படக் கூடிய இயல்புள்ளது. வெகுநாள் நீடித்தும் நிற்கக்கூடியது ஆதலால் நோயாளிக்கு வியாதி பூராவாக சமனமாகி நல்ல பலம் சரீரத்தில் திரும்பவும் ஏற்படும் வரை புஷ்டிகரமான ஔஷதங்களும் ஆகாரங்களும் ஸேவிக்கவேண்டும்.

நல்ல பலம் சரீரத்தில் ஏற்படும்படி செய்துவிட்டால் இந்த வியாதி தொடர்ந்து இருக்காது. சரியான சிகித்ஸை செய்யாவிடில் ஜீர்ணப் பிரவாஹிகையாகி, அதினால் பாலர்களுக்கும், துர்ப்பலமானவர்கட்கும் குதப்பிரம்ஸம் (ஆஸனம் தள்ளுதல்) முதலிய கடுமையான உபத்திரவங்கள் ஏற்படும். அவைகளைத் தகுந்த வைத்தியரிடம் சிகித்ஸை செய்துகொள்ளவேண்டும். ஜீர்ணப் பிரவாஹிகைக்கு ஆயுர்வேதத்தில் போல் அவ்வளவு உயர்ந்த ஔஷத யோகங்கள் வேறெங்கும் இது வரையிலு மேற்படவில்லை.

ஸ்ரீ:

# ஆரோக்கிய சந்த்ரிகா—அநுபந்தம்.

## வில்வம்— बिल्वः

தெலுங்கு- பில்வமு. மலேயாளம்- கூவளம்.
English- Bael.

இது இந்தியா முழுவதும் பயிராகும் ஓர் பெரிய விருக்ஷம். எங்கும் எளிதில் கிடைக்கும். கிளைகளில் முட்களுடனும் ஒரு கொத்திற்கு மும்மூன்று இலைகளுடனும் விளாம்பழத்திற்கொத்த பெரும் பழங்களுடனும் காணப் படுகின்றது.

இது வேதப்பிரஸித்தமான புண்யவிருக்ஷம். இதை சிவபூஜகர்களான ஹிந்துக்கள் சிவனுருவமாகவே பாவித்து பூஜித்து வருகின்றனர். சிவனின் பூஜையில் முக்யமான தளம் வில்வதளம். இதை யக்ஞங்களுக்கு உபயோகமான புண்ய விருக்ஷமென யாக்ஞிகர்களும், மந்திரோபாசனை செய்யப்படும் தேவதைகளின் ஸாந்நித்யத்தை எளிதில் ஏற்படுத்தக்கூடிய உயர்ந்த விக்ரஹமமைக்கக்கூடிய விருக்ஷ மென மந்திரோபாஸகர்களும் புகழ்கிறார்கள். அவ்விதமே, வைத்யக உலகிலும் எந்த பாகமும் அபரிமிதமான ஸ்வாஸ்தியத்தை உண்டாக்கக் கூடியதென வைத்யர்கள் பாடுகின்றனர். இதில் வைத்யத்திற்கு உதவாத பாகம் ஒன்றுகூட இல்லை.

### இதில் உபயோகப்படும் பாகங்கள்.

இலை, பிஞ்சு, காய், பழம், வேர், பிசின்.

**வில்வ இலை:—** இது சுவையில் துவர்ப்பும் கைப்புமுள்ளதாகவும், உஷ்ணவீர்யமுள்ளதாகவும் இருக்கும். ஸ்வபாவத்தில் வெப்பத்தால் வியர்வையைப் பெருக்கி வீக்கத்தை வடித்தும், ஜ்வரதாபத்தை அகற்றியும், சிறிது மலத்தை இறக்கியும், ருசியை அதிகப்படுத்தியும், சரீரத்திற்கு ஹிதத்தைத் தருகின்றது.

1. இலைகளை வாட்டிச் சாறு பிழிந்தோ, அல்லது கஷாயமிட்டோ கொஞ்சம் தேன் சேர்த்து 1–3 அவுன்ஸ் சாப்பிட்டுவர காஸம், சுவாஸம், ஜலதோஷம், வாதகப விகாரங்களால் ஏற்படும் ஜ்வரம் இவைகள் தணியும்.

2. இலைச்சாற்றைப்பிழிந்து 2 அவுன்ஸ் மிளகுத்தூள் 4 * யவம் சேர்த்துக் கொடுக்க மலபந்தத்துடன் கூடிய சோபம், காமாலை அர்சஸ் இவை நீங்கும்.

3. பசுவின் மூத்திரம் விட்டு இலையை யிடித்துப் பிழிந்த சாற்றில் 3–4 அவுன்ஸ் தினம் காலை மாலை கொடுத்துவர பாண்டு, சோபம் இவை நீங்கும். (இவ் வியாதிகளில் புளி-உப்பு நீக்கிச் சாப்பிடவேண்டும்).

4. இந்த இலைகளை வாட்டி ஸ்வேதம் (ஒத்தடம்) கொடுக்க மார்வலி, மூச்சுப் பிடிப்பு மற்றும் சுவாஸ ரோகங்கள், வீக்கம் இவை நீங்கும்.

5. இளந்தளிரை வாட்டி மெல்லிய துணியில் முடிந்து ஒத்தடமிட கண் சிகப்பு கண்வலி (அபிஷ்யந்தம்) நீங்கும்.

6. வில்வ இலையை வென்னீரில் கொதிக்கவைத்து ஸ்னானம் செய்துவர சரீரத்தின் துர்க்கந்தம், வலி இவை நீங்கும். (இலை 1 பங்கு ஜலம் 64 பங்கு) ஜலம் $\frac{3}{4}$ பாகமாகச் சுண்டவேண்டும்.

வெந்தயம் சுமார் $\frac{1}{8}$ தோலா எடை ஊறவைத்து வில்வ இலையுடன் சேர்த்து அரைத்து(வில்வ இலை அரைத்தது சுமார் நெல்லிக்கனி பரிமாணம்) வீசம்படி எருமைத் தயிரில் கலக்கி காலை மாலை 7 நாள் பத்தியத்துடன் சாப்பிட நீடித்தப் பழைய பூய மேஹம் (Gonorrohcea) நீங்கும்.

பூ:— இதை கஷாய மிட்டாவது, உலர்த்திச் சூரணம் செய்தாவது உபயோகிக்கலாம். (கஷாயம் 2—4 அவுன்ஸ் சூர்ணம் (5—15 யவங்கள்) இது அக்னி மந்தத்தைப் போக்கி, வாந்தி, வயிற்றுப்போக்கு, நாவரட்சி இவைகளை நீக்குகின்றது.

---

* யவம்— அரிசியிடை. 1 Grain.

முள்:— இவைகளைச் சேர்த்து ஸ்கந்த கிரஹத்தால் பீடிக்கப்படும் குழந்தைகளுக்கு ரக்ஷையாகக் கட்ட ஷெ கிரஹதோஷம் நீங்கும்.

* பிஞ்சு— बिल्वशुण्टी— बिल्वशलाटुः

சுவையில் துவர்ப்பு அதிகமாயும், கசப்புள்ளதாகவு மிருக்கும். எளிதில் ஜீர்ணமாகக்கூடியது. ஸ்நிக்தம், தீக்ஷ் ணம், உஷ்ணம். அக்னிதீப்தியை அதிகரித்து ஆகாரங்களை நன்கு பாகம் அடையச் செய்கிறது. மலத்தை இறுக்கும்.

1. இளம் பிஞ்சை அரைத்து($\frac{1}{8}$–$\frac{1}{2}$ தோலா)எருமைத் தயிரில் கலந்து கொடுக்க வயிற்றுக்கடுப்பு, அதிஸாரம் நீங்கும். இவ்விதமே நன்கு அரைத்த (பிஞ்சின்)விழுதை பானத்தில் (Syrup) கரைத்தும் கொடுக்கலாம். சிறு குழந்தைகளுக்கு வரும் வயிற்றுக்கடுப்பு உபத்ரவங்களில் மிகவும் நல்லது.

3. அடிவயிற்றிலும் குதத்திலும் கத்தரிப்பது போன்ற வலியுடன் கூடிய ஜ்வரங்களில் பிஞ்சைப் பாலில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கலாம். (பிஞ்சு 2-தோலா, பால் 1-ஆழாக்கு, ஜலம் 4-ஆழாக்கு. பால் மீதமாகக் காய்ச்ச வேண்டும்.)

4. பிஞ்சை அரைத்த விழுது 1-தோலா, எள்ளுப் பொடி 1-தோலா இவைகளை தயிர்த்தெளிவில் கரைத்துச் சாப்பிட பிரவாஹிகை (சீதபேதி) நீங்கும்.

5. பிஞ்சு அரைத்த விழுது 1-தோலா, சுக்குப்பொடி வீசம் தோலா, வெல்லம் 1-தோலா. இவைகளைச் சேர்த் தரைத்து தினம் காலை சாப்பிட்டுவர கடுமையான கிரஹணீ ரோகமும் தீரும். மோர்சாதம் மட்டும் சாப்பிட வேண்டும்.

6. பிஞ்சை நறுக்கி வெய்யிலில் காயவைத்து இடித்த சூர்ணம் (6 யவம், $\frac{1}{8}$ தோலா) தேன் அல்லது வெல்லத் துடன் சாப்பிட்டுவர ரக்தார்சஸ் அஜீர்ணத்தால் ஏற்பட்ட வயிற்றுவலி இவைகள் நீங்கும்.

---

* விதை முத்தாமல் சுமார் பெரும் நெல்லிக்காய்ப் பிரமாண மாயிருக்கும் போது சேகரித்து கண்டங்களாக நறுக்கி வெய்யி லில் உலர்த்திக் கொள்ளவேண்டும்.

**இளம் காய்:—** சுவையில் சிறிது புளிப்புடன் கலந்த துவர்ப்பு கசப்புடன் கூடியதாக இருக்கும். ஸ்நிக்தம், உஷ்ணம், மலத்தைக்கட்டும். இதைத் துண்டு துண்டாக நறுக்கி வெய்யிலில் காயவைத்து இடித்து சூர்ணமாகவோ அல்லது அப்படியே அரைத்து விழுதாகவோ உபயோகிக்கலாம். 12–15 யவ அளவில் சூர்ணமும், 1 தோலா அளவில் விழுதும் கொடுக்கலாம். காயை உடைக்காமல் மேல் மண் பூசி அனலில் சுட்டு, ஆறினபிறகு அதன் உள்ளிருக்கும் விழுதை எடுத்தும் கொடுக்கலாம். காய்ந்த இளங் காயை கஷாயமிட்டு, அதன் கஷாயத்தில் வெல்லம் அல்லது கற்கண்டு சேர்த்து பானகமாக காய்ச்சி எடுத்து உபயோகப் படுத்தலாம். இந்தப் பானகம், அதிஸாரம், பிரவாஹிகை இவைகளில் ஏற்படும் வலியுடனும் சீதம், ரக்தம் இவைகளுடன் கூடிய மல பிரவிருத்தியை தடுத்து அந்த்ரத்திற்கு (குடலிற்கு) நல்ல வலிவை ஏற்படுத்தி அக்னி திப்தியையும் உண்டாக்குகின்றது. வில்வக்காய் காய்ந்தது 1 சேர், ஜலம் 16 சேர் விட்டு நன்கு காய்ச்சி ¼ மீதமாக கஷாயம் காய்ச்சி அதில் 4 சேர் வெல்லம் அல்லது கற்கண்டு போட்டு பானகமாக எடுத்துக்கொள்ளலாம். இம்மாதிரி இஞ்சிமுரப்பா செய்வதுபோல் வில்வக்காய்கஷாயத்தில் வெல்லம் போட்டு வில்வக்காய் சூர்ணமும் சேர்த்து முரப்பா பாகத்தில் எடுத்துக் கொள்ளலாம். இதை ஜீர்ண ப்ரவாஹிகைகளிலும், பிரவாஹிகை அதிகமாக இருக்கும் காலங்களில் முன்ஜாக்ரதைக்காகவும் அர்சஸ் வளராமலிருப்பதற்காகவும் உபயோகத்தில் கைகண்டது.

**வில்வத்தின் முற்றிய காய்:—** இது உள்ளுக்குச் சாப்பிட கெடுதி விளைவிக்கும். எளிதில் ஜீர்ணமாகாது. விதாஹம், விஷ்டம்பம், என்ற அஜீர்ண விகாரங்களை எளிதில் ஏற்படுத்தும். அதோவாதத்தை அதிகப்படுத்தும். அக்னி மாந்த்யத்தை உண்டாக்கும். ஆகையால் இதை உபயோகப்படுத்துவதில்லை.

**வில்வத்தின் பழம்:—** இது மற்ற வில்வத்தின் பாகத்தைக் காட்டிலும் சற்று வித்யாஸமுள்ளது. அந்த்ரங்களின் ஸங்கோசன சக்தியை அதிகப்படுத்தியும், மலத்தை

இளக்கியும் வெளிப்படுத்தி நாட்பட்ட அதிஸாரத்தையும் பிரவாஹிகையையும் குணப்படுத்தும். சிறு குடலின் சக்தி அதிகப்படுத்தப்படுவதால், வழக்கமாய் மலபந்தம் அஜீர்ணம் உள்ளவர்களுக்கு மலமிளக்கி நல்ல ஜீர்ண சக்தி, நல்ல மலவிஸர்ஜன சக்தி இவைகளை உண்டாக்குகின்றது. ஆனால் கடுக்காயைப் போல் மிருது ரேசனமாயும், பரிணமத்தில் கிராஹியாயும் இருப்பது இதில் கவனிக்கத் தகுந்த விசேஷம்.

இதன் சதையை துணியில் பிழிந்து தயிருடன் கலந்தோ அல்லது பானகமாகச் செய்தோ தினம் காலை ஸேவித்து வரவேண்டும். இதைத் தனியாகப் பாலில் அரைத்தோ, அல்லது தைலமாகக் காய்ச்சித் தலைக்குத் தேய்த்து வர * ஊர்த்வஜத்ருக்ஷமான ரோகங்கள் நீங்குவதுடன் கண், காது, மூக்கு, சிரஸ் இவைகளின் சக்திவிருத்தி குளுமை இவைகளை உண்டாக்கும்.

**பில்வ மஜ்ஜதைலம்:—** பில்வத்தின் விதைப் பருப்பை இடித்துப் பிழிந்தோ செக்கில் ஆட்டியோ எண்ணை எடுக்கலாம். இது மிகவும் உயர்ந்த வாதஹரமான தைலமாகும்,

**பில்வக்கட்டை:—** இதைச் செதுக்கி கஷாயமிட்டுச் சாப்பிட காஸம், ஆமவாதம், அக்னிமாந்தியம் இவை நீங்கும்.

**பில்வ பேசிகா:— बिल्वपेशिका**

இளம் பில்வத்தில் தடித்த தோல் நீக்கிய பாகம் விதையும் நீக்கி உபயோகப்படுவது பில்வ பேசிகை.

இது பிரவாஹிகா, அதிசாரம் இவைகளில் மிகுந்த ரக்தஸ்தம்பனம். இதை அபினுடன் ரக்தஸ்தம்பனத்திற்காகக் கொடுக்கிறார்கள். இவ்விதம் கலக்கப்பட்ட யோகங்கள் பல உண்டு. அதனுடன் கலந்து உபயோகிக்கத் தகுதியுள்ள வைத்யர்களைத் தவிர மற்றவர்கள் அபின் உபயோகிப்பது அபாயகரமானது. கொத்தமல்லி விதை

* கழுத்திற்கு மேற்பட்ட அங்கங்களில் உண்டாகும்.

யுடன் பாலில் கலக்கிச் சாப்பிட மூத்ரத்தை நன்கு பிரித்து அதிஸாரத்தையும் பிரவாஹிகையும் நிறுத்தவல்லது. ஜன னேந்திரியங்களில் ஏற்படும் விரணங்களேயும் ஆற்றவல்லது. இந்த பில்வ பேசிகையை அதிக உஷ்ணத்தால் ஏற்படும் மூத்ராகாதத்தில் (நீர் சுருக்கில்)நாபிக்கு கீழ் நன்கு அரைத் துத் தடவ சிறிது நேரத்திற் கெல்லாம் தடைபட்ட மூத்ரம் பிரிந்து வரும்.

**பில்வத்தின் வேர்:—** இதன் வேர்ப் பட்டை, ஸாரம் இரண்டும் உபயோகப்படுகின்றது. தசமூலம் என்ற பிரஸித்த கூட்டில் முக்யத்வம் வாய்ந்தது. திரிதோஷங் களேயும் சரிப்படுத்துவதிலும் கல்லீரலின் சக்தியை அதிகப் படுத்தி அக்னி, பித்தம் இவைகளின் சக்தியை வளர்ப்பதில் நிகரற்றது. வாந்தி, ரக்தபித்தம், குழந்தைகளுக்கு அஜீர் ணத்தால் ஏற்படும் வாந்தி, அதிஸாரம் இவைகளில் கஷா யமாகவோ அல்லது லேஹமாகவோ தயாரித்து சாப்பிடு வது மிகவும் ஹிதகரம். ஹிருதயத்திற்கு பலமளிக்கக் கூடியது. அர்சஸ்ஸில் ஏற்படும் வலிக்கு இதன் கஷாயத் தில் ஸ்வேதமோ, கஷாயத்ரோணியில் இடுப்பு வரை நனே யும்படி உட்கார்ந்து ஸ்வேதம் (Hip bath) எடுத்துக் கொள் ளுவதோ மிகுந்த கைகண்ட மருந்து.

விசேஷங்கள். எல்லா (फल) விருக்ஷங்களிலும் முற்றிய காய்தான் இளங்காயை விட உயர்ந்தது. இதில் முற்றி யது உபயோகமில்லே. அவ்விதமே இளங்காயின் வற்றல் தான் உயர்ந்தது.

फलेषु परिपक्वेषु ये गुणाः समुदाहृताः ।
बिल्वादन्यत्र विज्ञेयाः बिल्वमामं गुणोत्तरम् ।
द्राक्षाबिल्वशिवादीनां फलं शुष्कं गुणाधिकम् ॥

# குழந்தையின் ஆரோக்கியம்.

## சில குறிப்புகள்.

(T. S. ஈசுவர அய்யர், L. I. M., திருச்சி.)

நம் நாட்டிடில் குழந்தையை ஆரோக்கியமாய் வளர்க்கும் விஷயத்தில் பொதுஜனங்கள் எல்லோரும் ஒரு புதிய தான ஊக்கத்தைக் காட்டி வருகிறார்கள். ஆனாலும் துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் கையாண்டுவரும் வழிகள் இன்னும் சரியானபடி அமையவில்லை என்றே சொல்லவேண்டும். குழந்தைப் பாதுகாப்பிலீடுபடுவர்களை வாழ்த்துவதுடன் மட்டுமன்றி இவர்களுடைய செய்கையில் காணப்படும் குறைகளையும் கூடவே குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது.

முதலாவதாக, தொழில் முறையில் ஈடுபடுபவர் நன்கு உணரவேண்டியது யாதெனில், நம் நாட்டுப் பிற்கால சந்ததியாகிய குழந்தையின் ஆரோக்கிய நிலைமை, தற்போது வியாதியுள்ள குழந்தைக்கு வைத்யம் செய்து ஸ்வாஸ்திய நிலைமைக்குக் கொண்டுவருவதைப் பொறுத்ததல்லவென்பதும் குழந்தைக்கு வியாதிவராமல் தடுப்பதைப் பொறுத்ததென்பதும் கூறவேண்டியது முக்கியம். குழந்தையை ஆரோக்கிய நிலைமையிலிருக்கச் செய்ய, பொதுஜனங்களின் புத்திசாலித்தனத்துடன் கூடிய பூர்ண ஒத்துழைப்பிருந்தால் தான் தொழிலாளியால் முடியும். அவ்விதம் ஒத்துழைக்க வேண்டுமாயின் பெற்றோர்களாகிய பொதுஜனங்கள் தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விஷயத்தை நன்கு அறிந்தவர்களாக இருக்கவேண்டும்.

பொதுமக்களை மூடநம்பிக்கையுடன் அக்காரியங்களில் பிரவேசிக்கச் செய்வது மிகவும் தவறு. அவர்கள் செய்ய வேண்டியதை ஒவ்வொரு கார்யங்களையும் காரணத்துடன் சொல்லி அதன்படி நடக்கச் சொல்லவேண்டியதே முறை. அவ்விதம் இல்லையெனில் எதிர்பாராத ஸந்தர்ப்பங்களில்

புத்திசாலித்தனத்துடன் நடந்துகொள்வதை எதிர்பார்ப்பதில் பயனில்லை.

ஆனால் குழந்தை வளர்ப்பு வம்சபாரம்பர்ய ஆட்சிக்கு உடன்பட்டிருப்பதால் சிறிது கஷ்டமிருக்கின்றது. வைத்ய சாஸ்திரத்திலேயே குழந்தையின் ஆரோக்கிய வேலையில் தான் இம்மாதிரியான சில்லரை உபத்திரவம் ஏற்பட்டிருக்கின்றது. ஒரு கார்யத்தில் காணப்படும் தப்பானவழியைக் காட்டினால் மட்டும் போதாது. பொது ஜன அறிவிற்குச் சரியான முறையில் படும்படியான தகுந்த காரணங்களைச் சொல்லியே தீர வேண்டும்.

ஆகவே, இப்பொழுது குழந்தையின் ஸ்வாஸ்திய நிலைமைக்கு அடிப்படையான தத்துவங்களை ஆராய்வோம். அனுபவத்தில், நாம் குழந்தையை விலங்கினங்களுக்குச் சமானமாகவே கொள்ளவேண்டும். இயற்கையிலே விலங்குகள் எவ்வளவு ஸ்வேச்சையுடன் கார்யங்களைச் செய்கின்றனவோ, அதே முறையில்தான் குழந்தைகளும் செய்கின்றன.

குழந்தையின் உருவம் பிறக்கும் பொழுது தக்கபடி இருந்தால் அதன் பிற்காலம் அதற்குக் கொடுக்கப்படும் பராமரிப்பையும், ஆஹாரபுஷ்டியையும் பொருத்திருக்கிறது. குழந்தையின் வாழ்நாள் அதன் பிறப்பிற்கு முன்னமேயே ஆரம்பமாகிறது. அதாவது சிசு கர்ப்பவாஸம் தொடங்கிய நாள் முதற்கொண்டே என்று சொல்ல வேண்டும். கர்ப்பத்திலிருக்கும் காலம் முழுவதும் சிசு தன் போஷணைக்குத்தன் தாயையே நோக்கியிருக்கிறது. ஆதலின் கர்ப்ப காலத்திலேயே சிசுவையும் தாயாரையும் நன்கு போஷித்தல் வேண்டும். "நூற்றுக்குப் பாதிக்கு மேற்பட்ட பிரஸவங்களில் செயற்கையான ஆயுதங்களின் உதவி வேண்டியிருக்கின்றது" என்று சிலர் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கின்றனர். ஐரோப்பிய தேசங்களில் பதிவு செய்யப்பட்ட கணக்குகளை நோக்குங்கால் நூற்றுக்கு தொண்ணூறுக்கு அதிகமான பிரஸவங்கள் இயற்கையாகவே ஏற்படுகின்றன என்று தெரிகிறது. மேலும்

ஆயுத முறையினுல் வெளியாக்கப்படும் குழந்தைகளுக்கு ஏற்படும் காயங்கள் கொஞ்சமல்ல; சிறிதுநேரம் பொறுத்திருந்தால் ஸுகப் பிரஸவம் ஏற்பட்டிருக்குமென்று தெரிந்திருக்கும் ஸமயங்களில் இயற்கை முறையிலேயே பிரஸவமாகும்படி விடுவது குழந்தையின் பிற்கால ஆரோக்கியத்திற்கு மிகவும் உதவி செய்யும்.

அடுத்தபடியாக குழந்தையை வளர்க்கும் வழிகளைக் கூர்ந்து கவனிக்கவேண்டியது அத்தியாவசியமாகும்.

இக்காலத்திய மருத்துவச்சிகள் குழந்தையைப் பிறந்தவுடனேயே ஜலத்தின் ஸ்னானம் செய்விப்பது நமது சாஸ்திரப் பிரகாரமும் நவீன வைத்யப் பிரகாரமும் மிகவும் தப்பான காரியம். அப்படிச் செய்வதால் குழந்தை தேஹ உஷ்ணத்தை உடனே இழக்க நேரிடும். குழந்தையின் தேஹ உஷ்ணம் இருக்கவேண்டிய அளவிற்குக் கீழே இறங்குவது மட்டுமல்லாமல் கபஸம்பந்தமான வியாதிகள் உண்டாவதற்கும் காரணமாகும். குழந்தையின் வாயை ஒரு Gauze துணியைக் கொண்டு துடைப்பதும் மிகவும் குற்றமானது. தாய்ப்பால் கொடுக்கப்படும் குழந்தைக்கு தினம் மலசுத்தி ஆகவேண்டுமென்று சிலர் சொல்லுகின்றனர். ஆனுல் அதைப்பற்றி மிகவும் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. எப்படியிருந்தபோதிலும், குடலில் வேண்டுமளவு மலம் சேர்ந்தால் குழந்தைக்கு மலம் தானுகவே வெளிவரும்.

குழந்தைக்கு ஆமணக்கெண்ணை கொடுப்பது பற்றி மதபேதங்கள் இருக்கின்றன. நமது சாஸ்திரங்கள் பிரகிருதியை யனுஸரித்து கொடுக்கவேண்டுமென்று சொல்கின்றது. நமது ஸாம்பிரதாயிகமான முறையில் கேட்போமாயின் குழந்தையை வளர்ப்பது ஆமணக்கு எண்ணை என்றே நமது பெரியோர்கள் கூறுவர். ஆங்கில வைத்ய முறைப்படி ஆமணக்கெண்ணையைக் கொடுக்கவே கூடாதென்றும், குழந்தையின் வயிற்றுக் கோளாறுகள் பல ஏற்படுவது இதனுல்தான் என்றும் அபிப்ராயம் தெரிவித்தெரிவிக்கிருர்கள்.

(தொடரும்.)